முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களிடம் குறிஞ்சி இல்லத்தில் நேற்று முன்தினம் (25.10.2025) முரசொலி நாளிதழில் இளைஞர் அணி சார்பாக வெளியிடப்பட்டு வரும் பாசறைப் பக்கத்தின் 1000 ஆவது இதழின் பிரதியை துணை முதலமைச்சரும், இளைஞரணியின் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வில் இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், ப.அப்துல் மாலிக், க.பிரபு, பி.எஸ்.சீனிவாசன், ஜி.பி.ராஜா மற்றும் அன்பகம் செந்தில், முரசொலி நாளிதழின் பொது மேலாளர் எஸ்.ராஜசேகரன், செய்தி ஆசிரியர் கு.சேது, கட்டுரையாளர்கள் தகவல் தொழில்நுட்ப அணியின் ஆலோசகர் கோவி.லெனின், மாணவர் அணியின் துணைச் செயலாளர் கா.அமுதரசன், செய்தி தொடர்புக் குழு துணைச் செயலாளர் மருத்துவர் எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா, ஓவியர் ரவி பேலட், பாசறை ஆசிரியர் குழுவினர் நீரை.மகேந்திரன், ர.பிரகாசு, கௌதம் ராஜ், சு.கதிரேசன், பா.கோபி ஆகியோர் உடனிருந்தனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னெடுப்பில் இளைஞர் அணி சார்பாக வெளியிடப்பட்டு வரும்

முரசொலி நாளிதழ் பாசறைப் பக்கம் 1,000 -வது இதழுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, அக்.27-

சென்னை குறிஞ்சி இல்லத்தில், தமிழ்நாடு முதலமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களிடம், நேற்று முன்தினம் (25.10.2025) முரசொலி நாளிதழில் இளைஞர் அணி சார்பாக வெளியிடப்பட்டு வரும் பாசறைப் பக்கத்தின் 1,000 -வது இதழின் பிரதியை, தமிழ்நாடு முதலமைச்சரும் இளைஞர் அணியின் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி வாழ்த்து பெற்றார்.

முத்தமிழறிஞர் கலைஞரின் மூத்தபிள்ளையாம் முரசொலியில், இன்றைய இளம் தலைமையினரை ஈர்க்கும் வகையில், தி.மு.கழக இளைஞர் அணியால் உருவாக்கப்பட்ட `பாசறை' பக்கத்தை தி.மு.கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 14.01.2023 அன்று தொடங்கி வைத்தார்.

பாசறைப் பக்கம் - 1,000

நீதிக்கட்சியில் தொடங்கி தி.மு.க. வரலாற்றை, ஓவியங்களால் விவரிக்கும் `திராவிடத்தால் வாழ்கிறோம்' , கழக முன்னோடிகளைப் பற்றிய `உடன் பிறப்பே', கலைஞரோடு நெருங்கிப் பழகியவர்களின் உணர்வுபூர்வமான அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் `கலைஞரும் நானும்', திராவிட இயக்கப் பெண்களைப் பற்றிய `திராவிடப் போராளிகள்', கலைஞர் ஆட்சியின் சாதனைகளை எடுத்துரைக்கும் 'இடம் -பொருள்-கலைஞர்', திராவிட மாடல் அரசின் சாதனைகளை உச்சி நுகரும் 'திராவிட மாடல் அரசு', சிறுபான்மையினருடன் கழகத்துக்கு இருக்கும் உறவைப் பற்றிப் பேசும் `மைனாரிட்டி தி.மு.க.' இடஒதுக்கீடு வரலாற்றினை விவரிக்கும் `எல்லோருக்கும் எல்லாம்' என 22 தொடர்கள் இதுவரை பாசறைப் பக்கத்தில் வெளியாகி பேராதரவைப் பெற்றுள்ளது.

பேராசிரியர் ஜெயரஞ்சன், பேராசிரியர் சுப.வீரபாண்டியன், வழக்கறிஞர் அருள்மொழி, கோவி.லெனின், மருத்துவர் எழிலன், வீ.எம்.எஸ். சுப குணராஜன், எம்.எம்.அப்துல்லா உட்பட 16 பேர் பாசறைப் பக்கத்தில் தொடர்கள் எழுதி உள்ளனர். இயக்க வரலாறு- கொள்கைகள்- சாதனைகள் ஆகியவற்றை இளைஞர்களிடம் கொண்டுசேர்க்கும் பணியைச் சிறப்போடு செய்துவரும் பாசறைப் பக்கம் ஆயிரமாவது நாளை எட்டியுள்ளது.

முதலமைச்சர் வாழ்த்து

அதையொட்டி, சென்னை குறிஞ்சி இல்லத்தில், தமிழ்நாடு முதலமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களிடம், நேற்று முன்தினம் (25.10.2025) முரசொலி நாளிதழில் இளைஞர் அணி சார்பாக வெளியிடப்பட்டு வரும் பாசறைப் பக்கத்தின் 1,000 -வது இதழின் பிரதியை, தமிழ்நாடு துணை முதலமைச்சரும் இளைஞர் அணியின் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி வாழ்த்து பெற்றார்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் எஸ். ஜோயல், ப.அப்துல் மாலிக், க.பிரபு, பி.எஸ்.சீனிவாசன், ஜி.பி.ராஜா மற்றும் அன்பகம் செந்தில், முரசொலி நாளிதழின் பொது மேலாளர் எஸ். ராஜசேகரன், செய்தி ஆசிரியர் கு.சேது, கட்டுரையாளர்கள் தகவல் தொழில்நுட்ப அணியின் ஆலோசகர் கோவி.லெனின், மாணவர் அணி துணைச் செயலாளர் கா.அமுதரசன், செய்தி தொடர்புக் குழு துணைச் செயலாளர் மருத்துவர் எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா, ஓவியர் ரவி பேலட், பாசறை ஆசிரியர் குழுவினர் நீரை.மகேந்திரன், ர.பிரகாசு, கௌதம் ராஜ், சு.கதிரேசன், பா.கோபி ஆகியோர் உடனிருந்தனர்.

ஆஸ்திரேலியாவில் தங்கப் பதக்கங்கள் குவித்துள்ள

தமிழ்நாட்டு வீரர்களுக்கு என் மனம் நிறைந்த பாராட்டுகள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக். 27 -

ஆஸ்திரேலியாவில் பதக்கங்களை குவித்துள்ள தமிழ்நாட்டைச் சார்ந்த வீரர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டு தெரிவித்து சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு : -

ஆஸ்திரேலியாவில் நடைபெறும் Badminton International Championshipஇல் தங்க வேட்டையை நிகழ்த்திக் காட்டி, பதக்கங்களைக் குவித்துள்ள நம் தமிழ்நாட்டு Para Badminton வீரர்களின் அபாரச் சாதனைக்கு என் மனம் நிறைந்த பாராட்டுகள்!

மேலும் மேலும் நீங்கள் பெற்று வரும் வெற்றிகளால், விளையாட்டுத் துறையில் உலக அளவில் தமிழ்நாடு தலைசிறந்து வருவது உறுதியாகி வருகிறது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.